பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஞு வைகாசி மீ 08 உ புதன்கிழமை [22—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 169

# சென்னைக் குண்டு வெடிப்பில்

# ராஜீவ் காந்தி படுகொலை!

### ஸ்ரீ பெரம்புத்தூரில் நேற்றிரவு நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சம்பவம்

## பொலிஸ் அதிபர் உட்பட 11 பேர் பலி!

சென்னை, மே 22

சென்னை ஸ்ரீபெரம்புத்தூரில் நேற்றிரவு 10-10 மணிக்கு இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இந்தியாவின் முன்னாள் பிரதமரும், அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. ராஜீவ்காந்தி (வயது46) கொலையுண்டார்.

சிரேஷ்ட பொலிஸ் அதிபர் ஒருவர் உட்பட பதினொரு பேர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

தேர்தல் பிரசாரத்தின் இறுதிக்கட்டமாக நேற்று மாலை தமிழகத்துக்கு விமானம் மூலம் வந்து சேர்ந்த திரு ராஜீவ் காந்தியும் அவரது குழுவினரும் ஸ்ரீபெரம்புத்தூரில் நடைபெறவிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு பெரு வரவேற்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு கூட்டத்தில் அவர் பேச முற்பட்டபோது ''ரிமோட் கண்ட்ரோல்'' முறையில் இயக்கப்பட்ட பெரும் குண்டொன்று வெடித்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

கடும் பாதுகாப்புக்கு மத்தியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த திரு. ராஜீவ் காந்தி, பெரும் குண்டுவெடிப்புக்கு இலக்காகி உயிரிழந்திருப்பது சர்வதேச மட்டத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

ராஜீவின் படுகொலைக்கு பின்னணி யார் என்பது குறித்து இன்று அதிகாலை இச்செய்தி எழுதப்படும்வரை தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

ராஜீவின் தாயாரான முன்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### உலகத் தலைவர்கள் அதிர்ச்சி

புதுடில்லி, மே 22

திரு ராஜீவ் காந்தி கொலையுண்டது குறித்து பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் உட்பட உலகத் தலைவர்கள் பலர் நேற்றிரவு தமது அதிர்ச்சியையும், கவலையையும் தெரிவித்தனர்.

உலகத் தலைவர்களின் அனுதாபச் செய்திகள் அடுத்தடுத்து புதுடில்லிக்கு வந்த வண்ணம் இருந்தன. [ரா]



### சிப்பாய் பலி!

மட்டக்களப்புப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சிப்பாய் ஒருவர் உயிரிழந்தனர் என்றும்—

இரண்டு படையினர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

## பெரும் வன்முறை வெடிக்கும் ஆபத்து!

புதுடில்லி, மே 22

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்ட செய்தி நேற்றிரவு வெளியானதை அடுத்து இந்தியாவின் பல பகுதிகளிலும் பெரும் பதற்றம் நிலவியது. எந்த நேரத்திலும் பெரும் வன்முறை மற்றும் கலவரம் கட்டுப்படுத்த முடியாத அளவில் வெடிக்கலாம் என்று அஞ்சப்படுவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

கலவரம் வெடிக்கும் பட்சத்தில் இந்தியப் பொதுத் தேர்தல் குழம்பும் நிலை ஏற்படும் என்றும்—

அதனால் முன்கூட்டியே தேர்தலை ஒத்திவைப்பதற்கான பிரகடனம் எந்த நேரத்திலும் வெளியிடப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் ஒரு சூழ்நிலை இன்று அதிகாலை புதுடில்லியில் நிலவியதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## கிழக்கில் ராணுவம் அட்டூழியம்!

## 27 தமிழர் வெட்டிக் கொலை!!

### ஐவரின் கண்கள் தோண்டப்பட்டன!!!

யாழ்ப்பாணம், மே 22

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் இராணுவ அட்டூழியங்களின்போது அப்பாவித் தமிழர்கள் இருபத்தைந்து பேர் வரை வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஐந்து பேர் கண்கள் தோண்டப்பட்ட பின்னர் படுகொலையுண்டனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ கடந்த சனியன்று வாழைச்சேனைப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் ஐந்து அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து அவர்களின் கண்களைத் தோண்டி எடுத்தபின் அவ்விடத்திலேயே வெட்டிக் கொன்றனர். இவ்வாறு கொலையுண்டவர்களில் வாகரையைச் சேர்ந்த மாணவர்களான ரமேஷ் [வயது 22], நேமிநாதன் [வயது 19], நவநீதன் [வயது 17] ஆகியோர்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### இளைமோர் தாக்குதலில் 2படையினர் பலி!

கொழும்பு, மே 22

மட்டக்களப்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் வைத்த இளைமோர் கண்ணித் தாக்குதலில் சிவில் ஆயுதப் படையினர் இருவர் கொல்லப்பட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. [உ-ர]

### மாதகல் கடலிலிருந்து படையினர் பீரங்கி தாக்கு!

மாதகல் கடலில் இருந்து நேற்றுக் காலை கரையோரப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலையே கடற்பகுதியில் படையினரின் 6 பீரங்கிப் படகுகள் நங்கூரமிடப்பட்டிருந்தன.

அதிகாலை 5; 30 மணியளவில் திடீரென பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. தொடர்ந்து காலை 7 மணி வரை தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. [ஓ-15]

### 9 முஸ்லிம்கள் உயிரிழப்பு

கொழும்பு, மே 22

அம்பாறை மாவட்டம் - மல்வத்தைப் பகுதியில் டிராக்டர் ஒன்றில் சென்று கொண்டிருந்த முஸ்லிம்கள் மீது இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர் என்றும்—

இரண்டு பேர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. [உ]

### பிரிட்டிஷ் தூதர் விவகாரம்:

## புகார் மனுச் சமர்ப்பிக்க பெர்னாட் லண்டன் சென்றார்

கொழும்பு மே 22

இலங்கையின் உள் விவகாரத்தில் பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்ரோன் தலையிட்டார் என்ற புகார் மனுவைக் கையளிப்பதற்காக இலங்கை வெளியுறவுச் செயலாளர் திரு. பெர்னாட் திலகரத்ன லண்டன் சென்றுள்ளார்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சிடம் புகார் மனுவைக் கையளித்து, அது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் திரு. திலகரத்ன பேச்சுக்கள் நடத்துவார் எனத் தெரியவருகிறது.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது திக்குவல்லைப் பகுதியில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் முறைகேடுகளில் ஈடுபட்டனர் என்றும் —

வாக்களித்தவுடன் கைவிரலில் பூசப்படும் மையை அழித்துவிட்டுத் தேர்தலில் இல்லுமுல்லுகளைச் செய்தனர் என்றும் பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்ரோன் பொலிஸில் முறையிட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

இதற்காக பிரிட்டிஷ் அரசு, தனது தூதர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை அரசு தற்போது கோரியுள்ளது.

அது குறித்த மனுவே லண்டன் அரசு அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளது. [ஓ-ஏ]

## இராணுவ நடவடிக்கைகள் மட்டக்களப்பு பகுதியில் தீவிரம்

யாழ்ப்பாணம், மே 22

கடந்த சனிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை கிழக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் இராணுவ நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சனி காலை 6 மணி முதல் திங்கள் காலை 6 மணிவரை மட்டக்களப்பு மாவட்டத்தின் நான்கு உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

வவுணதீவு, கொக்கட்டிச்சோலை, ஆயித்தியமலை, மண்டூர், தம்பலவத்தை, வெல்லாவெளி, பெரியபோரதீவு, உன்னிச்சை, 19 ஆம் கட்டை, பதுளுச் சந்தி, புல்லுமலை ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து படையினர் வெளியேறி மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் நிலைகொண்டுள்ளனர்.

கொடியபரம்படுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் வீடு ஒன்றைப் படையினர் சுற்றி வளைக்க முற்பட்டபோது படையினர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

சாமந்தியாறு, பாலைக் கொடிச்சேனை, திக்கோடை, சலுவந்தன்வெளி, கரடியனாறு ஆகிய பகுதிகளிலும் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

### முச்சந்தி முரளி




காந்தி என்ட பெயர் ... ஒரு முடிவு போல ...!

### இராணுவ நடவடிக்கையால்

## உயிரிழந்தோரின் குடும்ப கொடுப்பனவுக்கு ரூ. 8 கோடி

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டிலும் அதற்கும் பின்னரும் இராணுவ நடவடிக்கைகளால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்குத் தேவையான பணம் விரைவில் இங்கு வந்து சேரும்.

இதற்கென மொத்தம் எட்டு கோடி ரூபாவை அனுப்புவதற்கு அரசினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் இருந்து நேற்று அறிவிக்கப்பட்டது. யாழ். மேலதிக அரசாங்க அதிபருக்கு நேற்றுக் கொழும்பில் இருந்து

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

பென்டம் (Bantam) முட்டைகள் விற்பனைக்குண்டு. (இறிய கோழியின் முட்டைகள்) ஒன்றின் விலை ரூபா 15/- தொடர்பு கொள்ளவும்: இவி படப்பிடிப்பாளர்கள், 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [16739]

### எரு விற்பனை

எரு விற்பனைக்குண்டு வாங்க விரும்புவோர் சங்க வளவில் எருவைப் பார்வையிட்டு கூறுவிலைகளை 1991-05-24 ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும் யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-5069]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள் 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16722]

### அதிபர்கள் சேவை

போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி கிரகித்தல், பொது அறிவு, கல்விக் கொள்கைகளை உள்ளடக்கியது. அகிரன் வெளியீடு எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். [சி-4932]

### வைத்திய சேவை

வைத்தியத்துறை டாக்டர் பாலச்சந்திரன் இப்பொழுது சங்கானை பிளாக் வீதியில் தமது இல்லத்தில் சிகிச்சை அளித்து வருகிறார். காலை 7-00 — 8-00 மணிவரை பின் பகல் 2-00 — இரவு 8-00 மணி வரை. [16873]

### பயிற்சி வகுப்பு

வாழைநார் மூலம் அலங்காரப் பொருள்கள் செய்வதற்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. பயிற்சி பெறவிரும்புவோர் 25-5-91 சனிக்கிழமையும் 26-5-91 ஞாயிற்றுக்கிழமையும் 3 மணி தொடக்கம் 6 மணி வரை நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். செப்பினன்ட் சேனக் தியாகி திவ்பன் நூலகம், 42 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [16871]


**Computer Programming in BASIC Language**

காலம் 4 மாதங்கள்

**ஆரம்பம்: 24-05-1991**

வெள்ளி — 10 30 மணி

C. I. M. A, I. D. P, M. I. A. B., Short-Hand & Typing வகுப்புகள் இப்பொழுது தான் ஆரம்பமாகிக் கொண்டிருக்கின்றன

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
16, 3rd Cross Street
JAFFNA.

[சி-0007]


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
03 - 08 - 1917

இறைவனடியில்:
23 - 05 - 1990

அமரர்

## வித்துவான் ச. சி. ஞானப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற ஆசிரியரும், வளன்புரம் புனித சவேரியார் குருமடத்தின் தமிழ்த்துறை போதனாசிரியரும்)

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து எம்மை வழி நடத்தி மீளாத்துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே! தங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

23-5-1991 இல் புனிதவளன் சூசையப்பர் தேவாலயத்தில் காலை 6-00 மணிக்கும், புனித பரியாவ பேராலயத்தில் காலை 6-15 மணிக்கும் ஆன்மசாந்தி திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

5, வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். [16861]

# நன்றி

திருமதி விக்கி இராசம்மா கணபதிப்பிள்ளையின் மரணச் சடங்குகளில் கலந்து அனுதாபம் காட்டி, மலர்வளையங்களைக் கொடுத்தும், வேறு பலமுறைகளில் தங்கள் பங்களிப்பைக் கொடுத்த யாவருக்கும் எங்கள் மனமுவர்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். குறிப்பாக அவர்களின் சுகவீனத்தில் கவனித்து உதவிய இறின் வைத்தியசாலை வைத்தியர், தாதிமார் மற்றும் ஊழியர்களுக்கும் எமது நன்றி.

குடும்பத்தினர்.
டாக்டர் சந்திரா அம்பலவாணர்

பிஷப் இல்லம்,
வட்டுக்கோட்டை. [4087]

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
15 - 10 - 1924

ஆண்டவன் அடியில்:
06 - 06 - 1987

திதி:
22 — 05 — 1991

## அமரர் செல்லையா ஞானசுந்தரம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எங்களை நல்வழி நடத்தி எம்மை விட்டு நீங்கி இறைவனடி சேர்ந்து நான்கு வருடங்களாகியும் உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சத்தில் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்புச் சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
மருமக்கள், பெறாமக்கள்.

கலையாணி வீதி,
கோண்டாவில் வடக்கு. [16862]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

## கண்மணி தாமோதரம்பிள்ளை

தோற்றம்:
08 - 07 - 1926

மறைவு:
22 - 04 - 1991

இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடத்தி இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[illegible] [16872]


# கலை, வர்த்தகக் கல்லூரி

C. C. A. வெலிங்டன் சந்தி (யாழ்)

**DAY CLASS**

பொருளியல் — உதயன்
கேள்விக் கோட்பாடு - செம்மதிநிலுவை (10-00 — 12-00)
கணக்கியல் — ஸ்ரீ
உண்டியல் ... 8-30 — 9-00
கம்பனி ... 12-00 — 2-00
வர்த்தகம் — இரட்ணம் ... 9-00 — 10-30
அளவையியல் — சயந்தன்
குறியீட்டு அளவையியல்
தமிழ் — மீரா
இந்துநாகரிகம் — ஜோதீஸ்வரன்
புவியியல் — வேலாயுதபிள்ளை

ஆரம்பம் — 23 - 05 - 1991
வியாழன் மு. ப. 8-00 மணி

[சி-0011]


# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
28 - 12 - 1931

உதிர்வு:
22 - 04 - 1991

## அமரர் அப்பாப்பிள்ளை நடராஜா

(உப அதிபர், யா/ பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்)

பண்ணாகத்தைச் சேர்ந்த திரு. அப்பாப்பிள்ளை நடராஜா அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து தேறுதல் கூறியோர்க்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோர்க்கும் எமது குடும்பத்தின் சார்பில் இதயம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

23 - 05 - 1991 அன்று காலை 10-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும், மதியபோசன விருந்திலும் கலந்துபற்றிச் சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

பண்ணாகம்,
சுழிபுரம். [சி/5081]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
22 — 08 — 1934

மறைவு:
22 — 04 — 1991

அமரர்

## குருசு சின்னப்பு பர்னாந்து

(காசிப்பிள்ளை பர்னாந்து)

வந்தபணி முடிந்ததென்று வானுலகம் மீண்டீரா இப்படியும் ஓர் நொடியில் எம்மையெல்லாம் விட்டு அப்படியே பயணம் சென்று ஆறாயோ எண்ணினோம் கலங்கரையாய் எம்மைக் கரைசேர்த்த வள்ளலே கலங்குகிறோம் அதனால் கண்ணீரைக் கொட்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

32/11, 2ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம். [16860]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அந்தப் பக்க அலை

தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு எதிராகக் கூட்டணி ஒன்றை அமைப்பதில் எதிர்க்கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இம்மாத மத்தியில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்ட தோல்வி, அவற்றை இந்த வழியில் சிந்திக்க வைத்திருக்க வேண்டும்!

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல், பொதுத் தேர்தலாகக் கருதப்படக் கூடிய ஒன்றல்ல; ஆயினும் ஜனாதிபதி பிரேமதாச இதனைத் தனது அரசின் இரண்டு வருடகால ஆட்சியை தென்னிலங்கை மக்கள் அங்கீகரித்தார்களா, இல்லையா என்பதைக் கண்டறியும் இடைக்காலத் தேர்தல் என்று வர்ணித்தே வாக்கு வேட்டை ஆடினார். வெற்றியும் ஈட்டிவிட்டார்.

வறுமை ஒழிப்புத் திட்டம், அனேகருக்கு வேலைவாய்ப்பு என்பவற்றைச் சொல்லி பிரேமதாசா 52.3 சதவீத வாக்குகளைப் பெற்று விட்டார். எதிரணியினரோ தெற்கில் அறுபதாயிரம் பேர் அரசினால் கொலையுண்டனர், வாழ்க்கைச் செலவு உயர்வு, மக்கள் மீது சுமத்தப்படும் கடன் பளு என்பனவற்றைப் பிடித்துக் காட்டியும் வெற்றி பெற முடியவில்லை.

தேர்தலுக்கு முன்னர் அரசுக்கு எதிராகக் கூட்டணி அமைக்க முயன்று, அது கைகூடாமல் தனித்தனியே போட்டியிட்டவர்கள் எதிர்க்கட்சியினர். அதிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பீடத்தைக் கைப்பற்றப் பிடிக்க ஆசைப்படும் அனுரா, கூட்டணி அமைத்தாலும் எல்லோரும் "கை" சின்னத்தின் கீழேயே போட்டியிட வேண்டும் என்று அடம் பிடித்து ஒற்றுமை முயற்சிகளை முறியடித்தவர். அவருக்கு உள்ளூராட்சித் தேர்தல் பாடம் புகட்டுமா என்ற கேள்வி உண்டு.

திடீர் தேர்தல் ஒன்று வரலாம் என்று எண்ணியே எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைப்பதற்கு விழுந்தடிக்கின்றன. இங்கே புத்த அரசியல்வாதிகளுக்கு வழமையாக உள்ள பதவி ஆசையே முன்னுக்கு நிற்கிறது; மக்கள் நலன் குறித்து எவரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

1970களில் உருவான சுதந்திரக் கட்சி – இடதுசாரிகள் கூட்டணி நிலைத்து நிற்காமல் உருக்குலைந்து போனதையும், அதிக வாக்குகளைப் பெற்றும் தாம் ஆட்சியைக் கைப்பற்ற முடியாமல் போனதையும் மனதில் வைத்து, ஜே. ஆர். தமது ஐக்கிய தேசியக் கட்சி நிரந்தரமாக அரசாட்சி செய்ய வழிவகுப்பதற்காகவே விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையைக் கொண்டு வந்தார்!

ஓர் அடிப்படைக் கொள்கையை வைத்து தமக்குள் ஒன்றுபட முடியாத இடதுசாரிகளும், சோஷலிஸ்டுகளும் தென்னிலங்கையில் தேர்தலில் வென்று ஆட்சிபீடம் ஏறுவார்கள் என்பது முடவன் தேனுக்கு ஆசைப்படுவது போன்றதே! அப்படித்தான் அதிஷ்டவசமாக வந்தாலும், எத்தனை நாளைக்கு ஒத்து ஓடுவார்கள் என்பது கேள்விக்குறியே.

என்ன புதிய சிந்தனை இருந்தாலும், என்ன புதிய கொள்கையிருந்தாலும் தென்னிலங்கையில் முதலாளித்துவத்தின் பக்கம் அலை வீசுவது அப்பகுதி மக்களுக்கு உண்டான சாபக்கேடு என்று சொல்வதைவிட எதைத்தான் கூறமுடியும்?

# பெரும் வன்செயல்களுக்கு மத்தியில் 2ஆம் கட்ட வாக்களிப்பு நாளை

புதுடில்லி, மே 22

இந்தியப் பொதுத் தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்களிப்பு நாளை நடைபெறவிருக்கும் வேளையில் தேர்தல் வன்முறைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

உத்தரப்பிரதேசத்தில் மட்டும் தேர்தல் வன்முறையினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 43 ஆக உயர்ந்தது.

வன்முறை அதிகம் இடம்பெற்ற உத்தரப் பிரதேசம், பீஹார் ஆகிய மாநிலங்களுக்கு மேலதிக படையினர் அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

கான்பூர் நகரில் தேர்தல் வன்முறைகளை அடுத்து ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. அதை மீறுவோரை கண்ட இடத்தில் சுடும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மத்தியப் பிரதேசத்தில் தேர்தல் முன்னேற்பாடுகளுக்காக — வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் ஆகியவை சகிதம் — தேர்தல் அதிகாரிகள் சென்றுகொண்டிருந்த ஜீப் ஒன்றின் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது; இதனால் எட்டுப் பேர் உயிரிழந்தனர்.

பஞ்சாப்பில் வன்முறைகள் காரணமாக இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 17 பேர் உயிரிழந்தனர்.

ஆந்திரப் பிரதேசத்தில் நான்கு பேர் கொலையுண்டனர்.

பீகார் மாநிலம் முஸாபர் நகரில் விஷமிகள் 15 குடிசைகளைத் தீக்கிரையாக்கியதில் இரண்டு குழந்தைகள் தீயில் சிக்கி உயிரிழந்தன என்றும் அறிவிக்கப்பட்டது.

[உ-எ-த]

## எதியோப்பிய ஜனாதிபதி நாட்டை விட்டு ஓட்டம்!

அடிஸ் அபாபா, மே 22

எதியோப்பியாவின் ஜனாதிபதி ஜெனரல் மெங்கிஸ்து மரியம் பதவியை ராஜினாமாச் செய்தபின்னர் நாட்டை விட்டுத் தப்பி ஓடிவிட்டார் என்று அடிஸ் அபாபா வானொலி நேற்று அறிவித்தது.

உப ஜனாதிபதி டெஸ்பயே கிடானே பதில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார் என்றும் வானொலி மேலும் தெரிவித்தது.

ஜெனரல் மரியம் எங்கு சென்றார் என்பது பற்றிய விவரம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை என்றாலும் அவர் ஸிம்பாப்வே சென்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஜெனரல் மரியமுக்கு ஸிம்பாப்வேயில் தோட்டம் ஒன்று உண்டு என்று சொல்லப்படுகிறது.

அண்மைக்காலமாக ஜெனரல் மரியம் தலைமையிலான அரசப்படைகள் கிளர்ச்சிக்காரர்களிடம் தோல்வி கண்டு வருகின்றன. பல முக்கிய நகரங்களை கிளர்ச்சிக்காரர்கள் கடந்த சில தினங்களில் கைப்பற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[ஓ-எ]

## தமிழீழ வளங்கள் குறித்து இன்று ஆய்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 22

தமிழீழத்தின் வளங்கள் தொடர்பான ஆய்வுக் கருத்தரங்கு இன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை, புவியியற்றுறைத் தலைவர் திரு. எஸ். பாலச்சந்திரன், புவியியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான திரு. இ. சிவச்சந்திரன், திரு. எஸ். ரி. ஆர். ராஜேஸ்வரன் ஆகியோர் புவியற்றுறை ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

[உ]

## ஊர்காவற்றுறை மக்களுக்கு யாழ். நகரில் நிவாரணம்

புளியங்கூடல், மே 22

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது யாழ் நகரிலே தங்கி இருக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு விநியோகம் யாழ். நகரிலேயே இடம் பெறுகிறது.

முதல்கட்டமாக, 8 ஆம் கட்டம் தற்போது யாழ். நகரில் இருக்கும் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க தற்காலிக இலைகளில் இடம் பெறும்.

கஸ்தூரியார் வீதியில் உள்ள யும்மா மெஸ்கேலிலும் ஸ்ரான்லி வீதியில் உள்ள மணிலம் கட்டடத்திலும் உள்ள கிளைகளில் நிவாரணம் வழங்கப்படும்.

அதே சமயம் வேலணை ப. நோ. கூ. சங்கம் தனது நிவாரணத்தை தற்போது வேலணையிலே நடத்துவது குறிப்பிடத்தக்கது.

[இ-125]

## இரவில் ஹோட்டல்களில் தங்க வடபகுதி இளைஞர் அச்சம்

கொழும்பு, மே 22

கொழும்பில் ஹோட்டல்களில் தங்கி உள்ள வடபகுதி இளைஞர்கள் பலர் இரவு நேரங்களில் அங்கு தங்குவதற்கு அஞ்சுகின்றனர். புறக்கோட்டைப் பகுதியில் உள்ள குறுக்கு வீதிகளிலேயே இரவைக் கழிக்கின்றனராம்.

இவர்கள் தங்கி உள்ள ஹோட்டல்கள் தமிழ்க்குழுக்களின் உதவியுடன் பொலிஸாரினால் சோதனையிடப்படுவதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் இருந்து வந்து யாழ்ப்பாணம் திரும்பும் வரை ஹோட்டல்களில் தங்கி இருக்கும் வடபகுதி இளைஞர்களும் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே கொழும்பில் நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இரவில் இடம் பெறும் திடீர் சோதனைகளின் போது இவர்களிடம் இருந்து பெருமளவு பணம் கப்பமாகப் பெறப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

[இ-72]

## 6 மத்திய மருந்தகங்கள் மூடப்பட்ட நிலையில்

யாழ்ப்பாணம், மே 22

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ் மாவட்டத்தில் ஆறு மத்திய மருந்தகங்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை இத்தகவலைத் தெரிவித்தார்.

வேலணை, காரைநகர், பலாலி, காங்கேசன்துறை, மண்டைதீவு, புங்குடுதீவு பகுதிகளில் இயங்கிய மருந்தகங்களே மூடப்பட்டுள்ளன.

அதே சமயம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை தற்காலிகமாக மாவிட்டபுரத்தில் இயங்கி வருகிறது.

[இ]

## புதுவையிலும் வன்முறை

சென்னை, மே 22

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் பாகூர் தொகுதியில் இரண்டு அரசியல் கட்சிகளின் தொண்டர்களுக்கு இடையே நேற்று இடம்பெற்ற மோதலில் இரண்டு தொண்டர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## பரீட்சை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 22

ஜி. சி. ஈ. உயர்தர விசேட பரீட்சையின் எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சை நாளை ஆரம்பமாகி எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதி வரை நடைபெறும்.

பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் வழமைபோல நாளை தத்தமது பரீட்சை நிலையங்களுக்குச் செல்லுமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

[ஓ-5-15]

## சங்கீத சபையின் பரீட்சை ஒத்திவைப்பு

வடஇலங்கை சங்கீத சபை நடத்தும் [தரம் 2 தொடக்கம் 6 வரை] அறிமுறைப் பரீட்சை, ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15, 16 ஆம் திகதிகளில் நடைபெற இருந்த இந்தப் பரீட்சை எதிர்வரும் [ஜூன்] 22, 23 ஆம் திகதிகளுக்குப் பின்போடப்பட்டுள்ளது.

தரம் 5, 6க்குரிய நாடக முக அரங்கியலும் செய்முறைப் பரீட்சை 25 ஆம், 26 ஆம், 27 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

[ஓ]

## கலைப்பு

பக்தாத், மே 22

20 ஆண்டுகளாக செயற்பட்டு வந்த இராணுவ நீதிமன்றத்தை ஈராக் அரசு நேற்று கலைத்து விட்டது.

[ஓ-எ]

## நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்தின் ஸ்தாபகரும், முன்னாள் தலைவருமாகிய திரு ச. ஞானப்பிரகாசம் ஞாபகார்த்த நினைவஞ்சலிக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

[இ]

## மகாத்மா காந்தியை சுட்டது நியாயமானதே! "சிவசேனா" தலைவர் கூறுகிறார்

பம்பாய், மே 22

மகாத்மா காந்தியை கோட்ஸே சுட்டுக் கொலை செய்தது குறித்து தாம் பெருமைப்படுவதாக சிவசேனா இயக்கத் தலைவர் திரு. டாக்கரே தெரிவித்திருக்கிறார்.

காந்திஜி கொலை செய்யப்பட்டதாலதான் இந்தியா மேலும் பிளவுபடாமல் தடுக்கப்பட்டது. ஆகவே அவரைச் சுட்டுக்கொன்றது நியாயமானதே — என்று அவர் குறிப்பிட்டார்.

இதே வேளை —

காந்திஜின் சிலைகளை பொதுஇடங்களில் இருந்து அகற்றும் காலம் விரைவில் வரும் என்று சிவசேனா இயக்கத்தைச் சேர்ந்த பம்பாய் மாநகர மேயர் சொன்னார்.

சிவசேனா இயக்கம் பாரதிய ஜனதாக் கட்சியின் முதுகெலும்பு போல இருந்து அதற்கு ஆதரவளிப்பதாகும்.

[அ-எ]

## ஈழ அகதிகள் திரும்பி வர கடவுச்சீட்டுக்கு விண்ணப்பம்

சென்னை, மே 22

தமிழகத்தில் முகாம்களில் தங்கி இருக்கும் ஈழத் தமிழ் அகதிகளில் அதிகமானோர் இலங்கை திரும்புவதற்காக கடவுச்சீட்டுப் பெற விண்ணப்பித்து வருகின்றனர்.

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு நூற்றுக்கணக்கான கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் நாளாந்தம் அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது.

முகாம்களில் தங்கியுள்ள ஈழத் தமிழர் மீது முன்னர் எப்போதும் இல்லாதவாறு இம்முறை மாநில அரசு அதிக கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இவ்வாறு கடும் கட்டுப்பாடுகளின் மத்தியில் இருக்கும் தமிழ் அகதிகள் பல்வேறு தொல்லைகளுக்கும், அசௌகரியங்களுக்கும் ஆளாகிச் சலிப்படைந்து காணப்படுகின்றனர்.

இவர்களில் பலரும் மீண்டும் இலங்கை திரும்ப விருப்பம் கொண்டு இலங்கைக் கடவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்து வருகிறார்கள்.

இதேவேளை —

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் ஈழத் தமிழ் அகதிகளுக்கு கடவுச் சீட்டுகளை விரைவாகவும் இலகுவாகவும் வழங்குவதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழ் அகதிகளை திரும்பச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஒன்றாகவே இந்த வசதிகள் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

இச்சூழ்நிலையில் அகதிகள் இந்தியப் பணத்தில் 18 ரூபா செலுத்தியதும் விரைவாக இலங்கைக் கடவுச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது.

[அ-5]

## மாவிட்டபுரத்தில்

மாவிட்டபுரம் இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை 5 மணிக்கு குடியிருப்பு பகுதிகளை நோக்கி சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை தச்சன்காடு முகாமிலிருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன; இடையிடையே ஷெல்வீச்சுகளும் நடத்தப்பட்டன.

## கிழக்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரின் பெயர் விபரங்கள் கிடைத்துள்ளன.

★ அதே தினம் உன்னிச்சை, சரடியனாறு பகுதியில் சைக்கிளில் சென்ற 15 தமிழர்கள் படையினரால் கொலையுண்டனர். அவர்களில் 13 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் அவ்விடத்திலேயே கிடந்தன.

★ சரடியனாறு பகுதியில் அதே தினம் விறகு வெட்டச் சென்ற ஆறு தமிழ்ப் பொதுமக்கள் 19 ஆம் கட்டை இராணுவ முகாம் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

★ காளை போட்டமடு என்ற இடத்தில் சனியன்று எட்டுப் பொதுமக்களைப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர். மூன்று அப்பாவிகள் சூட்டுக் காயங்களுக்கு இலக்கானார்கள். பத்து வீடுகளைப் படையினர் எரித்து நாசமாக்கினர்.

★ நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் பெரிய போரதீவு முகாம் இராணுவத்தினர் பழுகாமத்தில் வைத்து இரண்டு தமிழர்களைக் கைது செய்து அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்றனர்.

★ கலுவிந்தவெளி என்ற கிராமத்தைச் சுற்றிவளைத்த படையினர் அங்கும் இரண்டு பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். அங்கிருந்த இரு மோட்டார் சைக்கிள்களை தம்முடன் எடுத்துச் சென்றனர்.

[உ]

## உயிரிழந்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிடைத்த செய்தியில் இருந்து இத்தகவல் வெளியானது:

1987-ஆம் ஆண்டுக்குப் பின் இராணுவ நடவடிக்கைகளால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மரணக் கொடுப்பனவுகள் இங்கு வழங்கப்பட்டு வந்தன.

மேற்படி கொடுப்பனவுகளை வழங்கப் போதிய நிதி இல்லாமையினால் தற்போது அது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து கொழும்பில் சம்பந்தப்பட்ட வட்டாரங்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக 8 கோடி ரூபாவை இங்கு அனுப்ப அனுமதி கிடைத்திருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

[அ-5]

## சென்னை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னாள் பிரதமர் இந்திரா காந்தி 1984 அக்டோபரில் சீக்கிய தீவிரவாதிகளின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததும் —

இந்திய அரசியலில் முன்னணியில் திகழ்ந்த ராஜீவின் சகோதரர் சஞ்சய் காந்தி விமான விபத்து ஒன்றில் உயிரிழந்ததும் தெரிந்தவையே.

1984 இல் தாயார் படுகொலையுண்டதை அடுத்து 1989 நவம்பர் வரை ஐந்து ஆண்டுகள் திரு. ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமராகச் செயலாற்றினார்.

ராஜீவ் காந்தி தனது மனைவி சோனியா காந்தியையும், மகன் ராகுல் காந்தி, மகள் பிரியங்கா ஆகியோரையும் விட்டுச் சென்றுள்ளார்.

[உ-த]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி வருஷ வைகாசித் திங்கள் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை [24 - 05 - 1991] நண்பகல் 12 - 05 மணிமுதல் 2 - 15 மணிக்குள் வரும் கன்னி லக்கினமும் அத்த நட்சத்திரமும் கூடிய சுப முகூர்த்தத்தில்,

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| தெய்வேந்திரன் B. A (Hons) | சுகுணரதி B A [Hons] |

ஆகிய இருவருக்கும் மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
★ திருமணத்தன்று மணமகன் இல்லம்: க. அருமைத்துரை [Anti-malariya Overseer] சுதுமலை மத்தி, மானிப்பாய். [சங்கர் கடைக்கும், சிமய பாரதி பாடசாலைக்கும் இடையில்] என்ற விலாசத்தில் நடைபெறும்.
★ 19 - 05 - 1991 ஆம் திகதி அன்று காலை 10 மணிக்கு வரவேற்புபசாரம் பனையில் நடைபெறும்.
★ மணமகன் இல்லத்தில் 25 - 05 - 1991 காலை 10 மணிக்கு வரவேற்புபசாரம் நடைபெறும்.

திரு திருமதி ஆ. கந்தையா
"சந்தகோட்டம்",
புலோப்பளை மேற்கு,
பளை.

திரு, திருமதி ஆ. நடேசு [R. F. O]
"லக்ஷுமி வாசா"
உடுவில் தெற்கு
சுன்னாகம்.

(இரு வீட்டார் அழைப்பு) [16969]

---

## ராணுவம் சூடு! பெண் காயம்

யாழ்ப்பாணம், மே 22

நாவாட்டான் கம்படைக் காட்டில் விளாம்பழம் பிடுங்கச் சென்ற பெண்கள் மீது நாவாட்டான் இராணுவ முகாம் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருபெண் படுகாயம் அடைந்தார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் முருங்கனைச் சேர்ந்த நல்லபெருமாள் மேரிமரியம்மா [36 வயது] என்ற பெண்ணே படுகாயமடைந்தார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [ஓ-15]

## மடுவுக்கு நேற்றும் வாகன அணி

யாழ்ப்பாணம், மே 22

மடு அகதி முகாமுக்கு நேற்றும் 13 லொறிகளில் உணவுப் பொருட்கள் போய்ச் சேர்ந்தன.

வவுனியா அசம்பாவிதத்தின் பின்னர் மடுவுக்குச் சென்ற இரண்டாவது வாகன அணி இதுவாகும். [ஓ-15]

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூமணி அன்ரனிப்பிள்ளை

திருமதி பூமணி அன்ரனிப்பிள்ளை காலமாகிவிட்டார்; இவர் திரு. அரியகுட்டி - காலஞ்சென்ற திருமதி பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், திருகோணமலையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரசாங்க மரக்கூட்டுத்தாபன அதிகாரி திரு. ம. அன்ரனிப்பிள்ளையின் இனிய மனைவியும், திரு. இளமன்ற் செல்வராஜா [நியூசிலாந்து], செல்வி செலின்ரினா செல்வராணி [ஆசிரியை, யாழ். புனித மரியாள் பாடசாலை], செல்வி கிலியா செல்வமலர் [சுசி] ஆகியோரின் ஆசைத் தாயாரும், சிவமணி ஜேம்ஸ், கமுகாசலம் [சவூதி], கங்காதரன், மனோன்மணி மகேந்திரன் [புலோலி], இந்திராணி இந்திரசேகரா, இறிதரன் [பிரான்ஸ்], குணிகாசலம், சந்திரகுமார் [சவூதி] ஆகியோரின் அன்புச் சகோதரியும், நேசமணி செல்லையா [திருகோணமலை], இந்திராதேவி [புலோலி], சிறீசக்தி, புனிதவதி [பிரான்ஸ்], இந்திரா [கன்னாகம்], பவானி [யாழ். கலட்டி] ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22-5-91 புதன்கிழமை [இன்று] பிற்பகல் 3 மணிக்கு 205/1, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இல்லத்திலிருந்து யாழ். அடைக்கல நாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். தயவு செய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கங்காதரன்

205/1, ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம் [சி/5085]

## திருமதி சிவக்கொழுந்து மாணிக்கம்

சரவணையைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து மாணிக்கம் அவர்கள் 21-05-91இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. சின்னத்தம்பி மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியும், திரு. இலிங்கப்பிள்ளை [ஓய்வு பெற்ற ஆசிரியர்], திருமதி கு. விசாலாட்சி, திருமதி பு. தங்கலட்சுமி, திரு. சண்முகநாதன் ஆகியோரின் தாயாரும், திருமதி இ. புவனேஸ்வரி, திரு. கணபதிப்பிள்ளை [ஓய்வு பெற்ற கட்டட மேற்பார்வையாளர்], திரு பரராசசிங்கம், திருமதி ச. ஸ்ரீதவம் என்போரின் மாமியாரும், காலஞ்சென்ற நாகலிங்கம், காலஞ்சென்ற திருமதி நு. நாகம்மா, திரு ப. மு. நாகராசா, திருமதி ச. இராசம்மா, காலஞ்சென்ற திரு. ப. மு. சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், திருமதி சி. ஆரூரன் [ஆசிரியை, ஊர்காவற்றுறை சென் மேரி], சேந்தன் [ஜேர்மனி], சுதா [ஆசிரியை, முறைசாராக் கல்வி நிலையம், வேலணை], கவிர்தா, திருமதி ரா, இசைஞானவதி, திருமதி ந. ஜெயந்தி, திருமதி ஜெ. ஆனந்தி, சாந்தி, சாந்தன், ஆனந்தன், ஜெயந்தன், தயாளன், குணாளன் [இத்தாலி], மணாளன், சீராளன், பிரபாகரன், ஞானகரன், பாஸ்கரி, சசிகரன், கவிதா என்போரது பாட்டியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் திரு. நா. தருலேசப்பிள்ளை அவர்களின் 83/19, தஞ்சி வேலி, அரசடிவீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் 22-05-91 இல் நடைபெற்று, பூதவுடல் மு. ப. 10 30 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்;
மா. இலிங்கப்பிள்ளை (மகன்)

[16742]

## திருமதி வள்ளிப்பிள்ளை வேலாயுதம்

நயினாதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி வள்ளிப்பிள்ளை வேலாயுதம் அவர்கள் 1991-5-20 ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாவிலில் காலமானார்.

அன்னார் நயினாதீவு காலஞ்சென்ற வினாசித்தம்பி வேலாயுதம் அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற சிவபாக்கியம், நாகராசா [முன்னாள் உத்தியோகத்தர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்], தருமராசா, செல்வராசா [முன்னாள் மின்னியலாளர், சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை] ஆகியோரின் அன்புத் தாயாரும், பெரியநாயகி, யோகம்மா, திலகவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற தமிழ்ச்செல்வி, கோமதி, ஆரணி, மணிமாறன், சுதாகரன், ரோகினி அசோக்குமார், சோதினி, தெய்வமனோகரன், மகிழினி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1991 5 20 அன்றே கொண்டாவிலில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

"பழமுதிர் சோலை"
இருபாலை றோட்,
கொண்டாவில் சந்தி,
கொண்டாவில்.

தகவல்:
நா. சதானந்தன்
[பேரமகன்]
கணக்குப் பரீட்சகர்,
கணக்காய்வு உப அலுவலகம்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

[16744]

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை

## தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கில வகுப்புக்கள் - 1991.

மேற்படி வகுப்புக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் எமது கந்தோர் விளம்பரப் பலகையில் வெளியிடப்பட்டுள்ளது. 25 - 05 - 91 காலை 9-00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பதிவு செய்வதற்காக தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

73, கண்டி றோட்,
யாழ்ப்பாணம்,
20 - 05 - 91.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்
[சி-5079]

---

## SUPER SHINE INSTITUTE

கோயில் வீதி

A/L 92 புதிய பிரிவு ஆரம்பம்

கணக்கியல்

திரு:- D. SAM

1991 - 05 - 23 வியாழன் 2.00 மணி

குறிப்பு:- 93 பிரிவு ஆர்வம் உள்ள மாணவர்களும் சேர்த்துக் கொள்ளலாம். இவர்களின் நலன் கருதி இரட்டைப் பதிவுடன் ஆரம்பமாகும்.

(16878)

---



## கரும்புலி மில்லர்

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

இடம்: நெ. ம. ம. வித்தியாலய மைதானம்.

ஆரம்பம்: 25 - 05 - 1991
சனி பி. ப. 3-30 மணி

மேற்படி எம்மிடம் பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களுக்கான கால அட்டவணையை 25-05-1991 க்கு முன்பாக எமது [பாடசாலைக்கு அருகாமையில் உள்ள] காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும். அத்துடன் அனுமதிக் கட்டணம் செலுத்தாதவர்கள் 25 ரூபா செலுத்த வேண்டும். இது தொடர்பாக வேறு எந்தவித அறிவித்தலும் வழங்கப்படமாட்டாது.

வி. பு மா. இயக்கம்,
செ. ச. ச. நிலையம்,

[சி-5082]

---

# மரண அறிவித்தல்கள்

## திரு. காராளுபிள்ளை வன்னியசிங்கம்

[இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்]

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரான காராளுபிள்ளை வன்னியசிங்கம் 20-5-1991 இல் இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற காராளுபிள்ளை மகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், இராம அற்புததேவியின் அன்புக் கணவரும், வெங்கடேஸ் [அமெரிக்க ஓக்கிளோகோமா பல்கலைக்கழக மாணவர்], பாஸ்கரன் [சோமேஸ் ஜெயவிக்கிரம கம்பனியின் கணக்காளர்] ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குமாரவேற்பிள்ளை, நீராவியடியைச் சேர்ந்த கண்மணியம்மா ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 22-5-1991 காலை 10 00 மணிக்கு அற்புத இல்லம், இல. 25, உடுவில் றோட், மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்.

25, உடுவில் றோட்,
மானிப்பாய். [16868]

## மாப்பாணர் வேலுப்பிள்ளை பூபாலரத்தினம்

[முன்னாள் உப்புக் கூட்டுத்தாபன உதவி அத்தியட்சகர்]

தனது விருப்பத்தின்பேரில் வதிரி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்தில் சகோதரன் திரு. வே. புவனேந்திரத்தால் [இளைப்பாறிய தபாலதிபரும், முன்னாள் திடீர் மரணவிசாரணை அதிகாரியும்] பராமரித்து வரப்பட்ட வே. பூபாலரத்தினம் 16 ஆம் திகதி இறைவடி எய்தினார். இன்றைய சூழ்நிலை காரணமாக அன்னாரது இறுதிக் கிரியைகள் ஆச்சிரமத்திலேயே நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:

வே. புவனேந்திரன்,
இளைப்பாறிய தபாலதிபரும்,
முன்னாள் திடீர் மரணவிசாரணை
அதிகாரியும்.

புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
[16876]

## திருமதி கார்த்திகேசு நாகமுத்து

சுழிபுரம் திசைமணலைச் சேர்ந்த திருமதி கார்த்திகேசு நாகமுத்து அவர்கள் [21-5-91] நேற்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும், திருமதி உமாதேவி, திரு. நடராசா [அதிபர் பண்ணாகம் மெய்கண்டான் ம. வி] திருமதி இராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், வினாசித்தம்பி, அருணாசலம் [ப. நோ. கூ. ச. சங்கம்] திருமதி ஜீவரத்தினா ஆகியோரின் அன்பு மாமியாரும் முகுந்தன், சேந்தன், கந்தன் திலீபன், சயந்தன், வானதி, கௌதமன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [22-5-1991] இன்று பகல் 12 மணியளவில் திருவடி நிலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. அருணாசலம்

[16743]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22- 05- 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org